இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in   murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 203 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 21 – திங்கள்கிழமை 04 மார்ச் 2024 – வெளியீர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 203 : Thiruvalluvar Year - 2055 - Maasi 21 - Monday 04 March 2024 - Dak 16 Pages ₹ 5.00







### ரூ.114.48 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள

# மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**மயிலாடுதுறை, மார்ச் 4-**

**மயிலாடுதுறையில் புதியதாக ரூ.114.48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைத்து நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.**

கழகத்தலைவர், முதல்வர்களுக்கு எல்லாம் முதல்வர், கடைக்கோடி மக்களும் அரசின் நல திட்டங்கள் சென்று அடையும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து வரும் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மயிலாடுதுறை பால்பண்ணையில் மயிலாடு துறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டிட ரூ.114.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.

அதுமட்டுமின்றி இக்கட்டிடம் கட்ட தன் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டினார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!



**பயனாளிகளுக்கு அரசு நலத்திட்டங்கள்!**

அடிக்கல் நாட்டிய ஓர் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டிடத்தை இன்று (4.3.2024) கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது திருக்கரத்தால் திறந்து வைத்து, சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிடும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுற்ற திட்டப் பணிகளையும் இன்று திறந்து வைக்கிறார். இம்மூன்று மாவட்டங்களுக்கும் அரசு நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை யாற்றுகிறார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முன்னதாக இவ்விழாவில் பங்கேற்றிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை எழும்பூரிலிருந்து ரயில் மூலம் நேற்று சீர்காழி புறப்பட்டார்.

நேற்று இரவு 8.30 மணி அளவில் வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சீர்காழி ரயில் நிலையத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்!**

முன்னதாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இன்று திறக்கப்படுவதை முன்னிட்டு அக்கட்டிடத்தினை பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். அதுபோது, அமைச்சர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

### ‘இந்தியா’ கூட்டணி ஆட்சிக்கு வந்ததும்,

## வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை !

### ராகுல் காந்தி உறுதி!

*ஜெய்பூர், மார்ச் 4-*

*நாட்டின் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ராகுல் காந்தி ‘இந்திய ஒற்றுமை நீதி நடைப்பயணம்’ மேற்கொண்டு வருகிறார். ராஜஸ்தானில் தனது நடைப்பயணத்தை நேற்று நிறைவு செய்த அவர், மத்திய பிரதேசத்தில் தனது பயணத்தை தொடர்ந்தார்.*

*அங்குள்ள குவாலியர் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர்,*

*நாட்டின் மக்கள்தொகையில் பாதி பேரிடம் உள்ள செல்வத்துக்கு நிகரான செல்வம் 22 பணக்காரர்களிடம் மட்டும் உள்ளதாகவும், இதில் 60 சதவீத பணம் 5 சதவீத பணக்காரர்களிடம் மட்டும் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.*

*கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உச்ச நிலையை எட்டியுள்ளதாகத் தெரிவித்த அவர், பாகிஸ்தான், வங்கதேசத்தில் உள்ளதை விட இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் இரட்டிப்பாக உள்ளதாகவும் கூறினார். பத்து முதல் பதினைந்து தொழிலதிபர்களின் 16 லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்துள்ள ஒன்றிய அரசு, பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் அளிக்க மறுப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.*

*இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், குறைந்தபட்ச ஆதரவு விலை சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். பாதுகாப்புப் படைகளுக்கு ஆள்சேர்க்க ‘அக்னிபத்’ திட்டத்தை மோடி அரசு அமல்படுத்தியுள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் பணியில் சேர்வோர் நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தால், அவர்கள் தியாகி என்றழைக்கப்பட மாட்டார்கள். அத்துடன் அந்தத் திட்டத்தால் பாதுகாப்புப் படைகளில் பணியாற்றி ஓய்வுபெறும் நான்கில் மூன்று பேருக்கு ஓய்வூதியம் கிடைக்காது என்றும் ராகுல் காந்தி கூறினார்.*

### இன்று (மார்ச் 4–ஆம் தேதி) கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கம் மற்றும் “எல்லோர்க்கும் எல்லாம்”

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள் !

## தமிழ்நாடு முழுதும் மாநகரம், நகரங்களில் நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 4-**

**இன்று (மார்ச் 4ஆம் தேதி) தமிழ்நாடு முழுவதும் மாநகரம் மற்றும் நகரங்களில் “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!” நடைபெறுகின்றன.**

இதுகுறித்த தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.2.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்” நடைபெற்றது.

இக்கூட்டத்தில் “ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமரவைத்த பெருமையைப் பெற்றுத்தந்துள்ளார். தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநிலசுயாட்சிக் கொள்கையையும், தமிழினத்தலைவர் கலைஞரின் சமூகநலத்திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிட மாடல் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள்.

அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரியவகையில் கொண்டாடும் விதமாக திராவிடமாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக்கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது” எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின்படி, பின்வரும் விபரப்படி - மாநகரம் மற்றும் நகரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சாளர்களைக் கொண்டு, “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!” நடத்திட வேண்டுமென தலைமைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**நாள்: 04.03.2024 (திங்கள்கிழமை)**

| இடம் | | சிறப்புரை |
|---|---|---|
| செங்கல்பட்டு நகரம் | : | கழகப்பொதுச் செயலாளர் **துரைமுருகன்**<br>எஸ்.ஜெகத்ரட்சகன் |
| திருநெல்வேலி மாநகரம் | : | மாண்புமிகு ஐ. பெரியசாமி |
| புகளூர் நகரம் | : | அந்தியூர் செல்வராஜ் |
| ஈரோடு மாநகரம் | : | திருமதி. கனிமொழி கருணாநிதி |
| நெய்வேலி நகரம் | : | ஆர்.எஸ்.பாரதி |
| குளச்சல் நகரம் | : | மாண்புமிகு எஸ். இரகுபதி |
| சிவகங்கை நகரம் | : | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| புதுக்கோட்டை நகரம் | : | மாண்புமிகு டி.ஆர்.பி. ராஜா |
| விழுப்புரம் நகரம் | : | டி.கே.எஸ். இளங்கோவன் |
| தாம்பரம் மாநகரம் | : | திருச்சி சிவா |
| திருப்பத்தூர் நகரம் | : | மாண்புமிகு கோவி. செழியன் |
| தேனி நகரம் | : | பொன். முத்துராமலிங்கம் |
| திருச்சி மாநகரம் | : | பேராசிரியர் சுப.வீ. |
| புதுக்கோட்டை நகரம் | : | ஜெயரஞ்சன் |
| திருச்செந்தூர் நகரம் | : | தாயகம் கவி |
| மயிலாடுதுறை நகரம் | : | ஏ.கே.எஸ். விஜயன் |
| பூவிருந்தவல்லி நகரம் | : | திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் |
| கருமத்தம்பட்டி நகரம் | : | பவானி கண்ணன் |
| திருத்துறைப்பூண்டி நகரம் | : | குத்தாலம் பி. கல்யாணம் |
| வடலூர் நகரம் | : | திருமதி. சல்மா |
| கள்ளக்குறிச்சி நகரம் | : | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| வாலாஜாபேட்டை நகரம் | : | சிவ. ஜெயராஜ் |
| தருமபுரிநகரம் | : | காசிமுத்து மாணிக்கம் |

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்